

இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் ஈடுபடும் கழகத்தினருக்கு எழும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு உதவிடும் வகையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் தலைமைக் கழகம் மூலம் ஒருங்கிணைத்திட கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ எம்.பி., மேற்பார்வையில் அமைக்கப்பட்டுள்ள உதவி மையத்திற்கு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நேரில் சென்று, நடைபெற்று வரும் எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து ஆய்வு செய்ததுடன், பல்வேறு மாவட்டத்தில் உள்ள கழக பாக முகவர்களிடம் அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர் பாகத்தில் நடைபெற்று வரும் எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து கேட்டறிந்தார். அதுபோது, சட்டத்துறை இணைச் செயலாளர்கள் சூர்யா வெற்றிகொண்டான், ஜெ.பச்சையப்பன், சட்டத்துறை துணைச் செயலாளர் டாக்டர் ஜி.சந்திரபோஸ், கழக வழக்கறிஞர் பாலாஜி ஆகியோர் உடனிருந்தனர்.

### 109—வது பிறந்த நாளையொட்டி – இன்று

# முன்னாள் அமைச்சர் சி.வி.எம். அண்ணாமலை திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## க.செல்வம் எம்.பி. – சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. – கழகத்தினர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ. 20 -

தந்தை பெரியார் அவர்களின் சீடரும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் தம்பியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பருமான என்னுடைய பாட்டனார், முன்னாள் அமைச்சர், செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அவர்களின் 109வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, இன்று (20.11.2025) காலை 08.30 மணியளவில், காஞ்சிபுரம், இரயில்வே சாலையிலுள்ள இல்லத்தில், அன்னாரது திருவுருவப் படத்திற்கு, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்டப் பொருளாளர் சன் பிராண்ட் கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி, ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.திலகர், எஸ்.சந்துரு, அ.தசரதன், சு. வெங்கடேசன், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.பாபு, தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் எம். எஸ். சுகுமார், தலைமைக் கழக பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, கழக தொண்டர் அணி தலைவர் ஜி. சுகுமாரன், கழக நெசவாளர் அணி செயலாளர் டி. அன்பழகன், கழக வர்த்தக அணி துணை செயலாளர்கள் பி. சுந்தரவரதன், வி.எஸ்.இராமகிருஷ்ணன், காஞ்சிபுரம் ஒன்றியக் குழுத் தலைவர் மலர்கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.கே. தேவேந்திரன் மற்றும் கழக முன்னோடிகள் முன்னிலையில் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது.

நிகழ்ச்சியில், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துக் கொள்ள உள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, காலை 11.15 மணிக்கு பூக்கடைசத்திரம் பகுதியிலும், காலை 11.30 மணிக்கு மணியளவில் காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனை எதிரிலும், காலை 11.45 மணிக்கு புதுப்பாளையத் தெரு சந்திப்பு, பிள்ளையார்பாளையம் பகுதியிலும், பிற்பகல் 12.00 மணிக்கு சின்ன காஞ்சிபுரம், செட்டித்தெரு பகுதியிலும் பொதுமக்களுக்கு பசியாற்றும் நிகழ்வு நடைபெற உள்ளது.



பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு அரசு மருத்துவமனையில் திருத்தணி சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் திடீர் ஆய்வு மேற்கொண்டு நோயாளிகளிடம் சிகிச்சை குறித்து விசாரிப்பது, மருத்துவமனை பதிவேடுகளைச் சரிபார்ப்பது, மற்றும் மருத்துவமனையின் பிற வசதிகள் பாதுகாப்பான சுகாதாரமான சேவைகளை பொது மக்களுக்கு வழங்க டாக்டர்களுடன் ஆலோசனைகள் மேற்கொண்டார் உடன் மாவட்ட சுகாதார அலுவலர் பிரியா ராஜ், ஒன்றிய கழகச் செயலாளர் சி.ஜெ. சீனிவாசன் பேரூர் கழக செயலாளர் சி.ஜெ. செந்தில்குமார் உள்பட மருத்துவர்கள் உள்ளனர்




### திரு. வி.க. நகர் மண்டலத்தில்

# ரூபாய் 39.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்காவிற்கு அடிக்கல்!

## ரூ.35,08 கோடி மதிப்பீல் வளர்ச்சித் திட்டப் பணிகள் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார்!



சென்னை,நவ.20-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, திரு.வி.க. நகர் மண்டலத்தில் ரூபாய் 39.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி, ரூபாய் 35.08 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை நேற்று (19.11.2025) பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட மேடவாக்கம் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் வார்டு75, மேடவாக்கம் 2 வது தெருவில், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த திறந்த வெளி நிலத்தினை மாநகராட்சி சார்பில் மீட்டெடுத்து அவ்விடத்தில் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூபாய் 39.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைப்பதற்கான பணியினை அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்.

பின்னர், வார்டு74, இந்து சமய அறநிலைத்துறை சார்பில் அருள்மிகு சேமாத்தம்மன் கோவிலில் நடைபெற்று வரும் கோயில் மண்டபம் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வார்டு 69, ஜி.கே.எம் காலனி ஜம்புலிங்கம் சாலையில், ரூபாய் 25.72 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த சமுதாயக் கூடம் 40,300 சதுரடி பரப்பளவில் தரைத்தளத்தில் கார், இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடனும், முதலாவது தளத்தில் ஒரே சமயத்தில் 435 நபர்கள் அமர்ந்து உணவு சாப்பிடும் வகையில் உணவுக்கூடம், இரண்டாவது தளத்தில் 800 இருக்கைகளுடன் திருமண மண்டபம் மூன்றாம் தளத்தில் 10 எண்ணிக்கையிலான தங்கும் அறைகள் வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

பின்னர், வார்டு68, கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலையில், ராஜா தோட்டம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு வளாகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூபாய் 1.10 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் இரண்டு பல்நோக்கு மைய கட்டடப் பணிகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளவும் விரைவாக முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு71, பெரம்பூர் நெடுஞ்சாலை அருகே பொதுப்பணித் துறையின் சார்பில் ரூபாய் 8.26 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டட கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுகளின் போது, மேயர் திருமதி ஆர். பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் திருமதி முல்லை, சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி சு. கீதா, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ரமணி லோகேஷ், திருமதி புனிதவதி எத்திராஜன் மற்றும் பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் விஜயன் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் மா.சுப்ரமணியன் தலைமை! துணை மேயர் மு.மகேஷ்குமார் முன்னிலை!

# வழக்கறிஞர் வேளச்சேரி வே.ரமேஷ்குமார் இல்ல மணவிழா வரவேற்பு!

## ஆர்.எஸ்.பாரதி – தமிழச்சி தங்கபாண்டியன் – இரா.கிரிராஜன் வாழ்த்து!



சென்னை, நவ.21-

சென்னை தெற்கு மாவட்ட பிரதிநிதியும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வழக்கறிஞருமான வேளச்சேரி வே.ரமேஷ்குமார் - இர.மீனாட்சி இணையரின் இளைய மகள் வழக்கறிஞர் இர.கவிதா (எ) காவியா - வழக்கறிஞர் இர. ஷங்கரநாராயணன் ஆகியோரின் திருமணம் (23-11-2025 - ஞாயிறு) அன்று காலை 8.00 மணிக்கு சென்னை வேளச்சேரி தண்டீஸ்வரம் சாலையில் அமைந்துள்ள ராஜலக்ஷ்மி திருமண மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

முன்னதாக (22-11-2025 - சனிக்கிழமை) அன்று மாலை 7.00 மணியளவில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்சிக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ர மணியன் தலைமை வகிக்கிறார்.

சென்னை மாநகர துணை மேயர் மு.மகேஷ்குமார் முன்னிலை வகிக்கிறார்.

எஸ்.ஆர்.செந்தில், கே.கே.மோகன், எஸ்.ராமசந்திரன், த.கோ.வெங்கடேசன், ஏ.சக்திவேல், எம்.நாராயணமூர்த்தி, கே.கே.செழியன், எஸ்.லிங்கப்பன் மற்றும் எஸ்.ஜெயராம் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன், இரா.கிரிராஜன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

மேலும் மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ். பாஸ்கரன், ஐ.கென்னடி, பகுதி கழக செயலாளர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ண மூர்த்தி, ஆலந்தூர் என். சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் மின்னல் கந்தப்பன், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன் மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக வழக்கறிஞர்கள், ஆன்றோர், சான்றோர் பெருமக்கள் கலந்து கொண்டு மனமக்களை வாழ்த்துகின்றனர்.

கழக வழக்கறிஞர்கள் வேங்கைவாசல் மு.கா.கதிரவன், சைதை ஆ.தேவக்குமாரன், ஈ.சுரேஷ், கே.சுகுமார், வழக்கறிஞர் டி. குமரன் மற்றும் எஸ்.சரவணன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## சென்னை கிழக்கு மாவட்டம் - அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, அம்பத்தூர் தெற்குப் பகுதி பாக நிலை முகவர்கள் (BLA 2) ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் -மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, அம்பத்தூர் தெற்கு பகுதி, பாக நிலை முகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம், மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில், 20/11/2025 வியாழக்கிழமை மாலை நடைபெறுகிறது.

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 20.11.2025 (வியாழன்) | மாலை 6.00 மணி | அம்பத்தூர் தெற்கு பகுதி | K.S.P.மஹால் கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

இக்கூட்டத்தில் அம்பத்தூர் தெற்கு பகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர், இந்நாள்/முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் பாக நிலை முகவர்கள் (BLA2) தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
**செயலாளர் – சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.**




திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி பிடிஓ அலுவலகம் அருகில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டபட்ட இசேவை மையத்தின் செயல்பாடுகள், வசதிகள், ஊழியர்களின் அணுகுமுறை, கட்டணங்கள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான சேவைகள் சரியாக வழங்கப்படுகிறதா என்பதை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் ஆய்வு செய்தார். உடன் எஸ்.ரமேஷ், மு.மணிபாலன், இரா.அறிவழகன், எம்.கேசவன், மு.பாஸ்கரன், கே.ஆறுமுகம், மு.அப்துல்கரீம், நரேந்திரன், அறிவழகன், ரெட்டம்பேடு.செந்தில், அங்கமுத்து ஆகியோர் உடன் இருந்தனர்.